**மத்திய நுவரகம்பலாத பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ரான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கிடைத்த மூலதன செலவின மானியம் ரூபா 8,433,913 தொகை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உரித்துகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன் | மூலதன செலவின மானியம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019/02 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் | பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது இத்தவறு இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன். | பெறுமானத்தேய்வு தேய்வுக் கொள்கைக்கு இணங்க பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் குறைந்து செல்லு மீதி அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்தமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 18,445,784 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 9,222,892 என கணக்கீடு செய்தமையால் சபையின் மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் நிலையான சொத்துக்கள் ரூபா 9,222,892 ஆல் அதிகரித்திருந்தது. | | |
| (இ) | பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 3,743,700 தொகை வைப்பொன்றாக கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்தமையால் சபையின் வருடாந்த வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகிரித்திருந்ததுடன் வைப்பு மீதி அப்பெறுமானத்தினால் குறைவடைந்திருந்தது. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | வைப்பு மீதிகள் வருமானமாக இனங்காண முடியாது |
| (ஈ) | மீளாயவாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 7,217,146 ஆன மூலதன சொத்து மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்தமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைவடைந்திருந்ததுடன் மீண்டெழும் செலவினம் அப்பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | மூலதனச் சொத்துக்கள் நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டினுல் மதகுகளுடன் கூடிய வீதி புனரமைப்பு 20 செயற் திட்டங்களுக்காக ரூபா 2,409,907 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்வீதிகளுக்குரிய மதகுகளின் புனரமைப்பு பெறுமதி இனங் காணப்பட்டு மூலதனமாக்காமையால் சபையின் நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்தும் மீண்டெழும் செலவினம் அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | மதகு நிர்மாணம் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 154,260,000 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | கையேற்பதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | உரித்தினை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 13,086,812 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,882,652 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீத வரி மற்றும் வரி** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 85,800 ஆன நிலுவை வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலுவைகளை பதிவழிக்க உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டின் நிலுவை அறவிடப்பட்டு வருகின்றது. | நிலுவை வரி அறவிடப்படல் வேண்டும். அத்துடன் அறவிடப்படாமல் உள்ள நிலுவை வரி தொடர்பாக சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 08 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,053,137 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல், அறவிட முடியாத மீதிகளை முறையாக பதிவழிப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்நிலுவை தொகையில் ரூபா 131,532 ஐ பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரூபா 575,271 ஐ அறவிடுவதற்கு அறிவூட்டல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வாடகை வருமானத்தை அறவிடுவதற்கும் முறையான அங்கீகாரத்தைப் பெற்று அறவிடப்படாத வாடகையை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **ஏனைய வருமானம்** | | |
| | அறிவித்தல் பதாதை கட்டணங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 231,800 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவையை அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 56,617 ஆன முற்பண மீதியொன்று சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | இது கணக்கு வைப்பு தவறொன்றாக இருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை சீராக்கும் போது சபை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். | சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களுக்கு குறித்த தினத்தில் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமையால் 2020 நவம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 25,445 ஆன தாமதக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | புறநெகும செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 2,505,266 தொகை மீளாய்வாண்டின் பெப்ரவரி 12 ஆந் திகதி வரையிலும் அச்செயற்திட்டத்திற்காக செலவிடப்படாமல் சபையின் உத்தியோகபூர்வ வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. | பொருத்தமான நடவடிக்கையொன்றை எடுப்பதற்கு செயற்படுவதாக அறிய தருகின்றேன். | நிதியத்தை விளைவற்ற வகையில் குவித்து வைக்காமல் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையால் வருடாந்தம் ரூபா 3,872,240 கிரயமொன்றை மேற்கொண்டு 800 தொன் கழிப்பொருட்கள் அளவில் சேகரிக்கப்படுவதுடன் அதில் ஒரு பகுதியை பயன்படுத்தி கொம்போஸ்ட் உர உற்பத்தி செய்யப்படுவதுடன் எஞ்சியவற்றை முறையற்ற வகையில் சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டு காணப்பட்டன | எதிர்காலத்தில் முறையாக கழிவுகளை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் . | கழிவுப்பொருட்கள் முறையாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |